(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 1(5).] **பாராளுமன்றம்**

# 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2020 செப்தெம்பர் 15 செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2020 செப்தெம்பர் 25, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

417/2020

கௌரவ சுஜித் பெரேரா,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கேகாலை மாவட்டத்தின் யடியந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவில் வீ ஒய என்ற பெயரில் நீர்த்தேக்கம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதன் நோக்கங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நீர்த்தேக்கத்தை நிர்மாணித்தால் இடம்பெயர நேரிடும் குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவ்வாறு இடம்பெயரும் குடும்பங்களை மீளக்குடியமர்த்த எடுக்கும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) இக்கருத்திட்டம் காரணமாக இடம்பெயரும் நபர்களின் வீடுகள் மற்றும் காணிகளுக்கு இழப்பீடு வழங்கும் முறைமை யாதென்பதையும்;

(iv) இடம்பெயரும் அம்மக்கள் தொடர்பாக எடுக்கும் எதிர்கால நடவடிக்கைகள் யாவையெனவும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2020 ஒக்டோபர் 06, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

9/2020

கௌரவ ஹேஷா விதானகே,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கு உரித்தான,

(i) கைத்தொழில் பேட்டைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) நில அலகுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) கைத்தொழில் பேட்டைகளில் இயங்கும் கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) கைத்தொழில் பேட்டைகளில் தொழில் புரியும் ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2017 ஆம் ஆண்டில் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் மத்திய மாகாணத்துக்காக,

(i) சுயதொழில் மேம்பாட்டுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்ட இடங்கள் யாவையென்பதையும்;

(iii) வழங்கப்பட்டுள்ள கருவிகள் யாவையென்பதையும்;

(iv) பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ள அடிப்படை யாதென்பதையும்;

(v) மேற்கொள்ளப்பட்டுள்ள தொழில்நுட்ப பயிற்சி வேலைத்திட்டங்கள் யாவையென்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தற்போது இணையத்தின் ஊடாக இலத்திரனியல் வர்த்தகத்தை மேற்கொள்வதற்கான வாய்ப்பு கிராமிய பிரதேசங்களில் வாழ்வோருக்குக்கும் திறந்துவிடப்பட்டுள்ள போதிலும், அதற்கான போதிய அறிவு வழங்கப்படவில்லை என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) இவ்வறிவினை முறையாக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

58/2020

கௌரவ சமிந்த விசேறி,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல் தெடர்பாக,

(i) விசாரணைக்கு உள்ளாக்கப்பட்ட அரச நிறுவனங்களையும் நியதிச் சட்ட நிறுவனங்களையும் சேர்ந்த ஊழியர்களின் எண்ணிக்கை;

(ii) கைது செய்யப்பட்ட அரச நிறுவனங்களையும் நியதிச் சட்ட நிறுவனங்களையும் சேர்ந்த ஊழியர்களின் எண்ணிக்கை;

எத்தனை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி ஊழியர்கள் சேவையில் ஈடுபட்டிருந்த அரச/நியதிச் சட்ட நிறுவனங்களின் பெயர்கள்;

(ii) மேற்படி ஊழியர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் அவர்கள் குறிப்பிட்ட நிறுவனங்களில் வகித்த பதவிகள்;

(iii) குறிப்பிடட ஊழியர்களுக்கு எதிராக இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்;

(iv) எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் நடவடிக்கைகள்;

யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

100/2020

கௌரவ புத்திக பத்திறண,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்களின் சட்டப் பிரச்சனைகளுக்குத் துரிதமாக தீர்வு காண்பதற்கும், சட்ட ஆலோசனைகளைப் பெறுவதற்கும் ஒரு நீதவான் நீதிமன்ற நியாயாதிக்கப் பிரதேசத்துக்கு குறைந்த பட்சம் தலா ஒரு சட்டத்தரணியை பொலிஸ் வழக்குகளை கையாளும் உத்தியோகத்தராக (Prosecutor) குறிப்பிட்ட நியாயாதிக்கப் பிரதேசத்திற்காக நியமிப்பதன் மூலம் இலங்கைப் பொலிஸிடமிருந்து சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் மக்கள் அதிக பயனடைவார்கள் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ஆ) (ii) மேற்படி புதிய பதவியினை உருவாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சாத்தியம் காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

161/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கொலொன்னாவ பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தஹம்புர, பொத்துவில்கும்புர, 101 ஆம் இலக்கத் தோட்டத்தில் சட்டவிரோத வீடுகள் கணிசமான எண்ணிக்கையில் காணப்படுகின்றன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீடுகளில் வதியும் குடும்பங்களில் அரச மாடி வீட்டுக் கருத்திட்டத்தில் வீடுகள் வழங்கப்பட்ட குடும்பங்கள் உள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனின், அக்குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) அவர்களுக்கு மேற்படி வீடுகளை வழங்கும்போது அரசாங்கத்தினால் பணம் அறவிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனின், அது எதற்காக என்பதையும்;

(v) அவ்வீடுகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்கப்பட்ட செயல்முறை யாதென்பதையும்;

(vi) அப்பிரதேசத்தில் மேலும் வீடுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு எஞ்சியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(vii) அவர்களுக்கு வீடுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

212/2020

கௌரவ மொஹமட் முசம்மில்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடத்திலும்,

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பிளாஸ்ரிக்கின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி பிளாஸ்ரிக் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது என்பதையும்;

(iv) மேற்படி பிளாஸ்ரிக் இறக்குமதியை மேற்கொண்ட கம்பனிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுயில் இலங்கைக்கு பிளாஸ்ரிக் இறக்குமதி செய்வதற்காக செலவிடப்பட்ட மொத்த பணத் தொகை யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

304/2020

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அம்முறைப்பாடுகளில் விசாரணைகள் நிறைவுசெய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) விசாரணைகள் நிறைவுசெய்யப்பட்ட முறைப்பாடுகளில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) முறைப்பாடு கிடைக்கப்பெற்று, விசாரணை மேற்கொள்ளப்பட்டு, குற்றப்பத்திரம் தாக்கல் செய்வதற்கு அல்லது முறைப்பாட்டைத் தள்ளுபடி செய்வதற்கு சாதாரணமாக எடுக்கும் காலம் யாதென்பதையும்;

(v) விசாரணை நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்காக அதிகாரசபையினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இம்முறைப்பாடுகளுடன் தொடர்புடைய பாதிக்கப்பட்ட சிறுவர்களில்,

(i) தமது குடும்பங்களுடன் இருப்பவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தமது குடும்பங்களிலிருந்து விலக்கி வைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அவ்வாறு விலக்கி வைக்கப்படுபவர்கள் தடுத்து வைக்கப்படுகின்ற இடங்கள் யாவையென்பதையும்;

(iv) தமது கல்வி நடவடிக்கைகளில் (முறைசார் மற்றும்/அல்லது முறைசாரா) முன்னர் போன்றே தொடர்ந்து ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை சதவீத அடிப்படையில் யாதென்பதையும்;

(v) முறையாகப் பயிற்சிபெற்ற ஆட்களினால் உளவியல் மற்றும் சமூக ரீதியிலான ஒத்துழைப்பு வழங்கப்பட்டுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இம்முறைப்பாடுகளுடன் தொடர்புடைய பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும் அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

10/2020

கௌரவ ஹேஷா விதானகே,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சீனக்குடாவில் அமைந்துள்ள எண்ணெய் தாங்கி கட்டிடத் தொகுதி பண்டாரநாயக்க ஆட்சி காலத்தில் 250,000 ஸ்ட்ரேலிங் பவுண் செலுத்தப்பட்டு அரசாங்கத்திற்கு சுவீகரிக்கப்பட்டதென்பதையும்;

(ii) இதன் ஒரு பகுதி தற்சமயம் இந்தியாவிற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) எஞ்சிய எண்ணெய் தாங்கிகளையும் இந்தியாவிற்கு குத்தகைக்கு விடுவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி எஞ்சிய எண்ணெய் தாங்கிகளை இந்தியாவிற்கு குத்தகைக்கு விடுவதை விட வேறேதேனும் பயன்தரும் மாற்றுவழி இல்லையா என்பதையும்;

(ii) இதன் ஒரு பகுதி தற்சமயம் இந்தியாவிற்கு குத்தகைக்கு விடுவதற்கு எதிராக மக்கள் அபிப்பிராயமொன்று நாட்டில் மேலோங்கி வருகின்றதென்பதால், அதற்கு செவிமடுக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி எண்ணெய் தாங்கிகளை கோரியுள்ள நாடுகளும் கோரிக்கைக்கான அடிப்படைகளும் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) சுதந்திரம் கிடைத்த பின்னர் ஆட்சி செய்த பல அரசாங்கங்களாலும் தற்போதைய அரசாங்கத்தினாலும் மேற்படி எண்ணெய் தாங்கிகள் பற்றி பல சந்தர்ப்பங்களில் சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரங்கள் மற்றும் கருத்திட்ட அறிக்கைகள் இருக்குமாயின், அவற்றின் தலா ஒரு பிரதியை பெற்றுத்தர முடியுமா என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

## 2020 ஒக்டோபர் 07, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

11/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிற்கும் “சேவா பியச” அலுவலகமொன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான நிதி ஒதுக்கீடு எவ்வளவென்பதையும்;

(iii) “சேவா பியச” அலுவலகமொன்றை நிர்மாணிக்கும் பொருட்டு மதிப்பீடு செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) இந்நிகழ்ச்சித்திட்டத்தினை நிறைவுசெய்வதற்கென திட்டமிடப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

60/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை கிரிக்கெட் நிறுவனமானது கிரிக்கெட் பல்கலைக்கழகமொன்றை அமைப்பதற்கான திட்டமொன்றைத் தயாரித்துள்ளதா என்பதையும்;

(ii) கண்டிப் பிரதேசத்தில் அதற்கான காணியைக் கொள்வனவு செய்வதற்காக பணம் செலவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அதற்கென செலவிடப்பட்டுள்ள மொத்தத் தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) பாராளுமன்றத்தின் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், மேற்படி காணிக் கொள்வனவின்போது பாரிய நிதி மோசடி நடந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(இ) அவ்வாறாயின், அது தொடர்பில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

102/2020

கௌரவ புத்திக பத்திறண,— வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முத்துராஜவெல சரணாலயம் இலங்கையில் மிகப்பெரிய சதுப்பு நிலம் என்பதையும்;

(ii) பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணமாக இந்த சரணாலயம் அழிவடைந்து வருகின்றது என்பதையும்;

(iii) மேற்படி சரணாலயத்தில் 406 ஏக்கர்கள் மெல்வத்த புரோபட்டி டிவலொப்பர்ஸ் எனும் கம்பனிக்கு வீடமைப்புக் கருத்திட்டத்துக்காக வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கருத்திட்டத்துக்கு ஒரு பர்ச்சஸ் காணி வழங்கப்பட்டுள்ள விலை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி கொடுக்கல் வாங்கல் சட்டவிரோதமானது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) ஆமெனில், இக்கருத்திட்டத்துக்கு எதிராக மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கை யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

163/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கொலொன்னாவ பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள வீடுகளில், நீர் மற்றும் வடிகாலமைப்பு வசதிகளற்ற வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு வீட்டுக்கும் குறிப்பிட்ட வசதிகளை பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

214/2020

கௌரவ மொஹொமட் முசம்மில்,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 முதல் 2019 வரையிலான ஒவ்வொரு ஆண்டிலும்,

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட உப்பின் அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) எந்த நாடுகளிலிருந்து உப்பு இறக்குமதி செய்யப்பட்டதென்பதையும்;

(iv) மேற்படி உப்பு இறக்குமதி செய்த கம்பனிகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் இலங்கைக்கு உப்பு இறக்குமதி செய்வதற்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2020 ஒக்டோபர் 08, வியாழக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

13/2020

கௌரவ ஹேஷா விதானகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிரிவெனா கல்விச் சபைகளுக்கு ஆசிரியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படும் போது பரிசீலனைக்குட்படுத்தப்படுகின்ற அடிப்படைக் கல்வித் தகைமைகள் யாவையென்பதையும்;

(ii) தற்போது பிரிவெனா கல்வி நிலையங்களில் ஆசிரியர் பதவிக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், ஆசிரியர் பதவிக்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அமைச்சின் பிரிவெனாக் கல்விப் பிரிவினால், பிரிவெனாக் கல்வியினை மேம்படுத்தும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

61/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் பதவிகளை வகித்த / வகிக்கின்ற நபர்களின் பெயர்கள் மற்றும் அவர்களின் பதவிகள் யாவை என்பதையும்;

(ii) அக்காலப் பகுதியில் ஒவ்வொரு நபரும் மேற்கொண்ட உத்தியோகபூர்வ வெளிநாட்டுப் பயணங்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு அலுவலரினதும் உத்தியோகபூர்வ வெளிநாட்டுப் பயணங்களுக்காக இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தால் ஏற்கப்பட்ட செலவுகள் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(iv) அத்தகைய உத்தியோகபூர்வ வெளிநாட்டுப் பயணங்களால் இலங்கையின் கிரிக்கெட் விளையாட்டுத் துறைக்குக் கிடைத்த பயன்கள் யாவை என்பதையும்;

(v) அவ்வாறான ஏதேனும் பயன் பெற்றிருப்பின், அது தொடர்பான தகவல்களைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

103/2020

கௌரவ புத்திக பத்திறண,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் புகையிரத கருமமாற்றல் செயன்முறை காலம் கடந்துள்ளது என்பதையும்;

(ii) கருமமாற்றல் நிலையத்தின் இடவசதி போதியதாக இல்லை என்பதையும்;

(iii) பயணச்சீட்டு வழங்கும் செயன்முறை மாற்றமடைய வேண்டும் என்பதையும்;

(iv) இதற்காக புதிய தொழில்நுட்ப செயன்முறையை பயன்படுத்த வேண்டும் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) புகையிரத கருமமாற்றல் செயன்முறைக்காக புதிய கருமமாற்றல் நிலையம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனில், இதற்காக செலவிடப்படும் பணத்தொகை யாதென்பதையும்;

(iii) புதிய பயணச்சீட்டுக்களை வழங்கும் செயன்முறைகளை அறிமுகம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி செயன்முறைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

164/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2020 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை அரசாங்கம் செலுத்த வேண்டியுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன் தொகை வருட வாரியாக தனித்தனியே எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி கடன் பெற்றுக்கொள்ளப்பட்ட திகதி மற்றும் கருத்திட்டங்கள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி கடன் தொகைகளுக்கான தவணைப்பணம் செலுத்துவதற்காக அரசாங்கம் தயார்செய்துள்ள வேலைத்திட்டம் யாதென்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

215/2020

கௌரவ மொஹொமட் முசம்மில்,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 முதல் 2019 வரையிலான ஒவ்வொரு ஆண்டிலும்,

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட எள்ளின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட தொகை யாதென்பதையும்;

(iii) எந்த நாடுகளிலிருந்து எள்ளு இறக்குமதி செய்யப்பட்டதென்பதையும்;

(iv) மேற்படி இறக்குமதியை மேற்கொண்ட கம்பனிகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் இலங்கைக்கு எள்ளு இறக்குமதிக்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2020 ஒக்டோபர் 09, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

15/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015.02.01 ஆம் திகதி தொடக்கம் இதுவரை சட்ட விரோத போதைப் பொருள் விற்பனை மற்றும் பயன்பாடு சம்பந்தமாக கைது செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்தின் பிரகாரம் தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) சட்ட விரோத போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்ற அரச அல்லது அரச அனுசரணை பெற்றுள்ள நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தினால் கைதுசெய்யப்பட்டுள்ள சட்ட விரோத போதைப் பொருளின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

63/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை மேற்கொள்ளப்பட்ட சட்ட விரோத போதைப் பொருள் சுற்றிவளைப்புகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அதன் மூலம், கைப்பற்றப்பட்ட சட்டவிரோத போதைப் பொருளின் அளவு எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அவ்வாறு கைப்பற்றப்பட்ட சட்டவிரோத போதைப் பொருள், பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பணியகத்தின் ஊடாக சட்டவிரோத போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளோர்களின் கைகளுக்கு மீண்டும் சென்றுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(இ) அது தொடர்பாக மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகளை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

105/2020

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பொலிஸ், விசேட அதிரடிப்படை மற்றும் மதுவரித் திணைக்களம் ஆகிய ஒவ்வொரு நிறுவனத்தினாலும் 2017.01.01 முதல் 2019.01.01 வரையில் மேற்கொள்ளப்பட்ட செயற்கை கள்ளு சுற்றுவளைப்புகளின் எண்ணிக்கை;

(ii) மேற்குறிப்பிட்ட காலத்தில் கைப்பற்றப்பட்ட செயற்கை கள்ளு லீற்றர்களின் அளவு;

(iii) மேற்படி சுற்றிவளைப்புக்களினால் அரசாங்கத்துக்கு கிடைக்கப்பெற்ற அபராதத்தின் பெறுமதி;

தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சில கள்ளு உற்பத்தியாளர்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ள அளவினையும்விட களஞ்சிய வசதிகளை பேணி வருகிறார்கள் என்பதையும்;

(ii) அவற்றில் நச்சுத்தன்மையான இரசாயனம் சேர்க்கப்பட்ட செயற்கை கள்ளு உற்பத்தி செய்யப்பட்டு களஞ்சியப்படுத்தப்படுகிறது என்பதையும்;

(iii) விசேட அதிரடிப்படை சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு இச்செயற்கைக் கள்ளினை கைப்பற்றியபோதிலும், சட்டத்தை அமுல்படுத்தும் போது சில மதுவரி உத்தியோகத்தர்கள் அவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தாது, தொழில்நுட்ப கோளாறுகளாக சுட்டிக்காட்டி, தீர்வுக் கட்டணத்துக்கு மாத்திரம் உட்படுத்தி குற்றவாளிகளை விடுதலை செய்வதாகவும்;

(iv) செயற்கை கள்ளினை ஆயிரக்கணக்கான லீட்டர்களில் உற்பத்தி செய்வதானது தொழில்நுட்பக் கோளாறல்ல மாறாக அது சில மதுவரி உத்தியோகத்தர்கள் வேண்டுமென்றே இந்த உற்பத்தியாளர்களைப் பாதுகாப்பதற்காக எடுக்கும் நடவடிக்கையே என்பதையும்;

(v) அதனால் அரசாங்கம் அதிகளவிலான வரி வருமானத்தை இழக்கின்றது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) செயற்கை கள்ளு உற்பத்தியை நிறுத்துவதற்கான சட்ட மறுசீரமைப்புக்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனில், குறிப்பிட்ட நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

166/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கோட்டே பிரதேச செயலாளர் பிரிவில் காணி உறுதியற்ற வீடுகள் எத்தனை உள்ளன;

(ii) மேற்படி வீடுகளுக்கு உறுதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான வேலைத்திட்டம் உள்ளதா;

(iii) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற வேலைத்திட்டம் தொடர்பான விடயங்களை இச்சபைக்குச் சமர்ப்பிக்க முடியுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

217/2020

கௌரவ மொஹொமட் முசம்மில்,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 தொடக்கம் 2019 வரை ஒவ்வோர் ஆண்டிலும்,

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பாசிப்பயறின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட நிதி எவ்வளவென்பதையும்;

(iii) எந்த நாடுகளிலிருந்து பாசிப்பயறு இறக்குமதி செய்யப்பட்டதென்பதையும்;

(iv) மேற்படி பாசிப்பயறை இறக்குமதி செய்த நிறுவனங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

தனித்தனியே அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் இலங்கைக்கு பாசிப்பயறை இறக்குமதி செய்வதற்காக செலவிடப்பட்ட மொத்த பணத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?